www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி தமிழ்

# 7

## பருவம் I, II & III

அரசு புதிய பாடத்திட்டத்தின்படி
விடைக் குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்

www.Padasalai.Net

Loyola
Publications
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
8111094696, 8940002320, 8940002321

₹. 240/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

**ஆசிரியர்கள்:**

திரு. **S. ஜேசுராஜ்** M.A., M.Ed.
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி
பாளையங்கோட்டை

திருமதி. **S. வர்கீஸ் மேரி** M.A., B.Ed
தூய இஞ்ஞாசியர் மேல்நிலைப்பள்ளி
பாளையங்கோட்டை

**Loyola Publications**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை/இயல் | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி | 5 |
| | | **பருவம் - 1** | |
| 1 | மொழி | எங்கள் தமிழ் * | 7 |
| | | ஒன்றல்ல இரண்டல்ல | 9 |
| | **அமுதத்தமிழ்** | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் | 12 |
| | | சொலவடைகள் | 16 |
| | | குற்றியலுகரம், குற்றியலிகரம் | 17 |
| 2 | இயற்கை | காடு * | 23 |
| | | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் | 25 |
| | **அணிநிழல் காடு** | விலங்குகள் உலகம் | 27 |
| | | இந்திய வனமகன் | 31 |
| | | நால்வகைக் குறுக்கங்கள் | 31 |
| | | திருக்குறள் * | 36 |
| 3 | நாடு, சமூகம் | புலி தங்கிய குகை | 39 |
| | | பாஞ்சை வளம் | 40 |
| | **நாடு அதை நாடு** | தேசியம் காத்த செம்மல் | 43 |
| | | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் | 43 |
| | | கப்பலோட்டிய தமிழர் | 47 |
| | | வழக்கு | 47 |
| | | **பருவம் - 2** | |
| 4 | அறிவியல், | கலங்கரை விளக்கம்* | 54 |
| | தொழில்நுட்பம் | கவின்மிகு கப்பல் | 56 |
| | | தமிழரின் கப்பற்கலை | 59 |
| | **அறிவியல் ஆக்கம்** | ஆழ்கடலின் அடியில் | 63 |
| | | இலக்கியவகைச் சொற்கள் | 65 |
| 5 | கல்வி | இன்பத்தமிழ்க் கல்வி | 72 |
| | | அழியாச் செல்வம்* | 74 |
| | **ஓதுவது ஒழியேல்** | வாழ்விக்கும் கல்வி | 76 |
| | | பள்ளி மறுதிறப்பு | 79 |
| | | ஓரெழுத்து ஒருமொழி, | 81 |
| | | பகுபதம், பகாப்பதம் | 81 |


www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


| | | | |
|---|---|---|---|
| **6** | கலை, அழகியல்<br>**கலை வண்ணம்** | ஒரு வேண்டுகோள்<br>கீரைப்பாத்தியும் குதிரையும்*<br>பேசும் ஓவியங்கள்<br>தமிழ் ஒளிர் இடங்கள்<br>தொழிற்பெயர்<br>திருக்குறள்* | 87<br>90<br>92<br>95<br>97<br>102 |
| | | **பருவம் - 3** | |
| **7** | நாகரிகம், தொழில்,<br>வணிகம்<br>**நயத்தகு நாகரிகம்** | விருந்தோம்பல்<br>வயலும் வாழ்வும்<br>திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி<br>திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்<br>அணி இலக்கணம் | 106<br>108<br>112<br>116<br>117 |
| **8** | அறம், தத்துவம்,<br>சிந்தனை<br>**ஒப்புரவு ஒழுகு** | புதுமை விளக்கு<br>அறம் என்னும் கதிர்<br>ஒப்புரவு நெறி<br>உண்மை ஒளி<br>அணி இலக்கணம்<br>திருக்குறள் | 123<br>126<br>129<br>132<br>133<br>138 |
| **9** | மனிதம், ஆளுமை<br>**மானுடம் வெல்லும்** | மலைப்பொழிவு<br>தன்னை அறிதல்<br>கண்ணியமிகு தலைவர்<br>பயணம்<br>ஆகுபெயர் | 141<br>144<br>146<br>150<br>152 |
| | | கட்டுரைகள், கடிதங்கள் | 158 |
| | | மாதிரி வினாத்தாள் | 163 |


www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# மனப்பாடப்பகுதி

## பருவம் - 1

### எங்கள் தமிழ்

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது
கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே
அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

– நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்

### காடு

பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் – கிளியே
நரியெலாம் ஊளையிடும்
அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடி!
சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
இயற்கை விடுதியிலே!

– சுரதா

### திருக்குறள்

**புறங்கூறாமை**

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

**வாய்மை**

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.
உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

**இறைமாட்சி**

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

– **திருவள்ளுவர்**



### புலி தங்கிய குகை

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே

– காவற்பெண்டு



www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



## பருவம் - 2

### கலங்கரை விளக்கம்

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை ......

– கடியலூர் உருத்திரங் கண்ணனார்

### அழியாச் செல்வம்

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன
விச்சைமற்று அல்ல பிற.

– சமண முனிவர்

### கீரைப்பாத்தியும் குதிரையும்

கட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால் - முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே

– காளமேகப்புலவர்

### திருக்குறள்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

- **திருவள்ளுவர்**

## பருவம் - 3

### விருந்தோம்பல்

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு - நீர்உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றாகு முன்றிலோ இல்

– முன்றுறை அரையனார்

### புதுமை விளக்கு

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று

– பொய்கை ஆழ்வார்

### அறம் என்னும் கதிர்

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்

– முனைப்பாடியார்

### திருக்குறள்

**வினைசெயல் வகை**

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

**நாடு**

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

**பெருமை**

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

- **திருவள்ளுவர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

பருவம் - I

இயல் 1

கவிதைப்பேழை

அமுதத்தமிழ்

# எங்கள் தமிழ்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பாட வினா)

**1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ........**

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம் **விடை : அ) வழி**

**2. 'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது....**

அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்

இ) குர + லாகும் ஈ) குர + ஆகும் **விடை : ஆ) குரல் + ஆகும்**

**3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...........**

அ) வான்ஒலி ஆ) வானொலி இ) வாவொலி ஈ) வானெலி **விடை : ஆ) வானொலி**

## II. நயம் அறிக

**1. 'எங்கள் தமிழ்' பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

(எ.கா) அருள் நெறி, அறிவு, கொல்லா, எல்லா,

அதுவே, அன்பு, கொள்கை, என்றும்.

**2. 'எங்கள் தமிழ்' பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

(எ.கா) அருள், தரலாகும், புகழாது, குறியாக,

பொருள், குரலாகும், இகழாது, நெறியாக.

**விடை : கொல்லா, இன்புறவே, அன்பும், ஊக்கி**

**எல்லா, என்றும், இன்பம், போக்கி**

**3. 'எங்கள் தமிழ்' பாடலில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

(எ.கா) தரலாகும், புகழாது, குறியாக, ஊக்கிவிடும்,

குரலாகும், இகழாது, நெறியாக, போக்கிவிடும்

**விடை : தரலாகும், குரலாகும்**

www.Padasalai.Net

### கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. தரலாகும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....**

அ) தர + லாகும் ஆ) தரல் + ஆகும் இ) தரலா + கும் ஈ) தரலா + கும்

**விடை : ஆ) தரல் + ஆகும்**

**2. நோன்பு எனப் பொருள் தரும் சொல்.........**

அ) விரதம் ஆ) பரதம் இ) உணவு ஈ) நீர் **விடை : அ) விரதம்**

**3. அறிவைத் தருவது ...........**

அ) அன்பு நெறி ஆ) இன்ப நெறி இ) அருள்நெறி ஈ) ஆன்மீக நெறி

**விடை : இ) அருள்நெறி**

**4. தமிழன் குரல் ............**

அ) அருள்நெறி ஆ) ஆன்மீக நெறி இ) உண்மைநெறி ஈ) அமைதி நெறி

**விடை : அ) அருள்நெறி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர் ....**

அ) வெ. இராமலிங்கனார் ஆ) கம்பர்
இ) பாரதியார் ஈ) கபிலர் **விடை : அ) வெ. இராமலிங்கனார்**

**6. தமிழர் கொள்கை ...........**

அ) அன்பு ஆ) ஆக்கம் இ) பொய்யாமை ஈ) நன்றியுடைமை

**விடை : இ) பொய்யாமை**

**7. காந்தியக் கவிஞர் என அழைக்கப்படுபவர் ..........**

அ) பாரதியார் ஆ) வெ. இராமலிங்கனார்
இ) பாரதிதாசன் ஈ) சுரதா **விடை : ஆ) வெ. இராமலிங்கனார்**

**8. தமிழர் குறிக்கோள் ............**

அ) கொல்லாமை ஆ) புலால் உண்ணாமை
இ) ஒத்துழையாமை ஈ) ஒன்றுபடுதல் **விடை : அ) கொல்லாமை**

**9. எங்கள் தமிழ் மொழி ....... போன்றது.**

அ) பால் ஆ) கரும்பு இ) தேன் ஈ) இனிப்பு **விடை : இ) தேன்**

## II. பொருள் தருக

| | | |
|---|---|---|
| ஊக்கிவிடும் | - | ஊக்கப்படுத்தும் |
| விரதம் | - | நோன்பு |
| குறி | - | குறிக்கோள் |
| பொழிகிற | - | தருகின்ற |

## III. பிரித்து எழுதுக

| | | | | |
|---|---|---|---|---|
| குரலாகும் | - | குரல் | + | ஆகும் |
| அன்பறம் | - | அன்பு | + | அறம் |
| தமிழெனும் | - | தமிழ் | + | எனும் |
| வானொலி | - | வான் | + | ஒலி |

## IV. எதிர்ச்சொல் தருக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புகழாது | x | இகழாது | போற்றாது | x | தூற்றாது |
| பொய் | x | மெய் | இன்பம் | x | துன்பம் |

## V. இலக்கணக் குறிப்பு தருக

1. புகழாது, இகழாது - எதிர்மறை வினையெச்சங்கள்
2. போற்றாதார் - எதிர்மறை வினையாலணையும் பெயர்
3. கொல்லா விரதம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. பொய்யா நெறி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
5. அன்பறம் - உம்மைத் தொகை
6. அன்பும், அறமும் - எண்ணும்மை
7. தேன்மொழி - உவமைத் தொகை

## VI. குறுவினாக்கள் (பாட வினாக்கள்)

**1. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**

➢ உலக மொழிகளில் தொன்மையானது நம் தமிழ்மொழி.
➢ அது மென்மையும் இனிமையும் வளமையும் உடையது.
➢ வாழ்வுக்குத் தேவையான அன்பையும் அறத்தையும் கூறுவது.
➢ காலச் சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்று, என்றும் இளமையோடு திகழ்வது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

➢ தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேச மாட்டார்.

➢ தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்கள்.

## VII. சிறுவினா (பாடவினாக்கள்)

**1. 'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

➢ நம் தாய்மொழியாம் தமிழ்மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத்தருகிறது. அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

➢ தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

➢ கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

➢ நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்; அது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்;

➢ எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழி ஆகும்.

## VIII. சிந்தனை வினா

**1. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

➢ தேன் உண்போர்க்கு வலிமையையும் உடல் நோய், குடல் நோய்களையும் போக்கவல்லது;

➢ அதுபோலத் தமிழ்மொழியும் எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ உதவுவதால் கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

## கூடுதல் வினாக்கள்

**1. இராமலிங்கர் - ஆசிரியர் குறிப்பு தருக.**

➢ இப்பாடலின் ஆசிரியரை, நாமக்கல் கவிஞர் என்றும் அழைப்பர்.

➢ இவர் தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர்.

➢ 19.10.1888 இல் இராமலிங்கர் பிறந்தார்.

➢ இவருடைய பெற்றோர் வெங்கட்ராமன், அம்மணி அம்மாள் ஆவார்.

➢ காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் 'காந்தியக் கவிஞர்' என்று அழைக்கப்படுகிறார்.

**தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர்.**

➢ மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

➢ 24.08.1972 இல் இராமலிங்கனார் இறந்தார்.

## கவிதைப் பேழை

### ஒன்றல்ல இரண்டல்ல

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பாட வினாக்கள்)

**1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் .........**

அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி **விடை : இ) பரணி**

**2. வானில் ....... கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில் **விடை : ஆ) முகில்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது....**

அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல

இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல **விடை : ஈ) இரண்டு + அல்ல**

**4. 'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...**

அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும்

இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும் **விடை : அ) தந்து + உதவும்**

**5. ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .........**

அ) ஒப்புமை இல்லாத ஆ) ஒப்பில்லாத

இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத **விடை : இ) ஒப்புமையில்லாத**

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. ஒன்றல்ல என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது....**

அ) ஒன்று + லல்ல ஆ) ஒன் + றுஅல்ல

இ) ஒன்று + அல்ல ஈ) ஒன்று + இல்ல **விடை : இ) ஒன்று + அல்ல**

**2. முல்லைக்குத் தேர் தந்தவன் .......**

அ) காரி ஆ) ஓரி இ) பாரி ஈ) பேகன் **விடை : இ) பாரி**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் | உடுமலை நாராயணக்கவி |
| 2. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்த வள்ளல் .......... | குமணன் |
| 3. தமிழகத்தில் வீசும் தென்றலில் ...................... கமழும் | தேன் மணம் |
| 4. இசைப் பாடலாகக் கூறப்படும் நூல் ........................ | பரிபாடல் |
| 5. வான்புகழ் கொண்ட நூல் எனப் போற்றப்படுவது .................... | திருக்குறள் |
| 6. தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பியவர் .......... | உடுமலை நாராயணக்கவி |

### III. பொருள் தருக.

1. ஒப்புமை - இணை
2. அற்புதம் - விந்தை
3. முகில் - மேகம்
4. உபகாரி - வள்ளல்

### IV. பிரித்து எழுதுக.

1. ஒப்புமை - ஒன்று + அல்ல
2. செங்கனி - செம்மை + கனி
3. தந்துதவும் - தந்து + உதவும்
4. கலம்பகம் - கலம் + பகம்
5. செம்பொருள் - செம்மை + பொருள்

### V. இலக்கணக் குறிப்பு

1. செங்கனி, நன்செய், செம்பொருள் - பண்புத்தொகை
2. முகிலினும் - உயர்வு சிறப்பும்மை
3. வாழ்ந்தவர் - வினையாலணையும் பெயர்

### VI. குறுவினாக்கள் (பாட வினாக்கள்)

**1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

➢ தமிழ்நாட்டில் வீசும் தென்றலில் தேன்மணம் கமழும்.

➢ சுவைமிகு கனிகளும் பொன்போன்ற தானியக் கதிர்களும் விளையும்.

➢ தமிழ்நாட்டில் பயிர்விளையும் நன்செய் நிலவளம் சிறப்புக்குரியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. 'ஒன்றல்ல இரண்டல்ல' – பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

- முல்லைக்குத் தேர் தந்து மழை மேகத்தை விடப் புகழ் பெற்ற வள்ளல் வேள்பாரி.
- புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்த குமண வள்ளல்.

## VII. சிறுவினா (பாட வினாக்கள்)

**1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

- பகைவரை வென்றதைப் பாடும் பரணி இலக்கியம்.
- இசைப்பாடலால் இலக்கிய இன்பம் நல்கும் பரிபாடல்.
- பல்வகை உறுப்புகளால் செய்யுள் படைக்கும் கலம்பகம்.
- அகமும் புறமும் நிறைந்த எட்டுத்தொகை நூல்கள்.
- வான் புகழ் சிறப்பு வாய்ந்த உலகோர் போற்றும் உயரிய நூல் திருக்குறள்.
- அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்கள்.

### கூடுதல் வினாக்கள்

**1. உடுமலை நாராயணக்கவி – ஆசிரியர் குறிப்புத் தருக.**

பிறப்பு : 25.9.1899
இறப்பு : 23.5.1981
பிறந்த ஊர் : பூவிளை வாடி (உடுமலைப் பேட்டை அருகில்)
சிறப்புப் பெயர் : பகுத்தறிவுக் கவிராயர் மற்றும் கவிராயர் என்று அழைக்கப்பட்டார்.

**சிறப்பு :**

- கலைவாணரின் குருவாக விளங்கியவர்.
- நடுவணரசு 2008 இல் இவருக்காகச் சிறப்பு அஞ்சல் தலை வெளியிட்டது.
- திரைப்பாடலாசிரியர், நாடக எழுத்தாளராகப் புகழ்பெற்றவர்.

## VIII. சிந்தனை வினா

**1. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?**

- அறக்கருத்தை வலியுறுத்தத் தோன்றிய இலக்கியங்கள் அற இலக்கியங்கள் அல்லது நீதி இலக்கியங்கள் எனப்படும்.
- சங்க இலக்கியங்களில் தனி நூலாக அமையாமல் வேண்டுமிடங்களில் அறக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.
- சங்கம் மருவிய காலத்தில் சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கில் அற நூல்கள் தோன்றின.
- மக்களின் நல்வாழ்க்கை சிறக்கவே அற இலக்கியங்கள் தோன்றின.
- சமய, சாதிப் பூசல் இல்லாமல் சமுதாயம் சிறப்புற்று வாழ அற இலக்கியங்கள் தோன்றின.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் பதினொன்று நீதி நூல்களும் உள்ளன.

## கற்பவை கற்றபின்

**1. தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**

**பாரி :**

- பறம்பு மலையினைப் பாங்குடன் அரசாண்ட அரசன்,
- இதயத்தில் இரக்கக் குணம் நிரம்பியவன்.
- படர்வதற்குப் பற்றுக்கோடின்றிக் காற்றில் அலைமோதிக் கொண்டிருந்த முல்லைக்கொடிக்குத் தன் தேரையே தானமாக அளித்தவன்.

**காரி :**

- வாள்வீச்சில் வல்லவன். வாள் திறமையாலேயே பகைவரை வீழ்த்தும்தன்மையுடையவன்.
- தன்னைத் தேடி வரும் இரவலர்களுக்கு இல்லையென்னாது வழங்கும்இனிய தன்மையுடைய அரசன்.
- பரிசாக வெண்மயிர் பிடரியுடைய குதிரைகளைப் பரிசாக வழங்கி மகிழ்வித்தவன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**பேகன் :**

- பழனிமலைப் பகுதியில் வாழ்ந்த மக்களின் அரசனாக அரும் பணியாற்றியவன்
- எல்லா உயிரினங்களையும் அன்பு செய்தவன்.
- கருமையான முகில் கூட்டங்களைக் கண்டு குளிரில் நடுங்கிக்கொண்டிருந்த மயிலுக்குத் தன் போர்வையைத் தானமாக வழங்கியவன்.

**அதியமான் :**

- தகடூர் நாட்டின் தன்னிகரில்லாத அரசன் அதியமான்.
- வேல் வீச்சில் சிறந்தவன்.
- கிடைத்தற்கரிய சாவா அமுதமாம் நெல்லிக்கனி ஒன்று கிடைத்தும், அதனை ஔவைக்குத் தந்து நீண்ட நாள் உயிர்வாழச் செய்த கொடை வள்ளல்.
- பொதிய மலைப்பகுதியில் உள்ள நிலப்பகுதியை அரசாண்ட குறுநில மன்னன்.
- தன்னைத் தேடி பொருள் பெற வந்தோர்க்குத் தாராளமாகக் கொடை வழங்கி மகிழ்வித்தவன்.

**ஓரி :**

- வல்வில் ஓரி என்று இலக்கியங்களில் பாராட்டப்படும் அரசன்.
- காரியைப், போரில் வென்று அவனது குறும்படை நாட்டைக் கைப்பற்றிச் சாதனை புரிந்தவன்.
- அந்த நாட்டைத் தன்னைப் புகழ்ந்து பாடிய பாணர்களுக்குப் பரிசாக வழங்கி வள்ளல் எனப் போற்றப்பட்டவன்.

**நள்ளி :**

- நெடுங்கோடு மலைப்பகுதியை மாண்புடன் அரசு புரிந்தவன்.
- போர் முனையில் கைகள் முன்னே சென்று போர் புரிவதைப் போல மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி மகிழ்ந்தவன்.

**2. தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

- பத்துப்பாட்டு
- எட்டுத்தொகை
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
- காப்பியங்கள்
- புராணங்கள்
- சிற்றிலக்கியங்கள்
- நாவல்கள்
- நாடகங்கள்
- சிறுகதைகள்
- புதுக்கவிதைகள்
- மரபுக்கவிதைகள்

## உரைநடை உலகம்

## பேச்சுமொழியும், எழுத்துமொழியும்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பாட வினாக்கள்)

**1. மொழியின் முதல் நிலை பேசுதல், ........ ஆகியனவாகும்.**

அ) படித்தல் ஆ) கேட்டல் இ) எழுதுதல் ஈ) வரைதல் **விடை : ஆ) கேட்டல்**

**2. ஒலியின் வரிவடிவம் ...... ஆகும்**

அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு **விடை : ஆ) எழுத்து**

**3. தமிழின் கிளை மொழிகளுள் ஒன்று ....**

அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம் **விடை : இ) தெலுங்கு**

**4. பேச்சுமொழியை ...... வழக்கு என்றும் கூறுவர்.**

அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி **விடை : ஆ) உலக**

### II. சரியா தவறா என எழுதுக.

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது. **விடை : சரி**
2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது. **விடை : சரி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி **விடை : தவறு**
4. எழுத்து மொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம் **விடை : தவறு**
5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம் **விடை : சரி**

## III. ஊடகங்களை வகைப்படுத்துக.

**வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்**

| **எழுத்து மொழி** | **பேச்சு மொழி** |
|---|---|
| செய்தித்தாள் | வானொலி |
| நூல்கள் | தொலைக்காட்சி |
| மின்னஞ்சல் | திரைப்படம் |

**கூடுதல் வினாக்கள்**

## IV. கோடிட்ட இடங்களை நிரப்புக.

| | | விடைகள் |
|---|---|---|
| 1. | எளிய நடையில் தமிழ்நூல் ......... வேண்டும். | **எழுதிட** |
| 2. | இலக்கணநூல் புதிதாக ......... வேண்டும். | **இயற்றிட** |
| 3. | செந்தமிழைச் ............. செய்திட வேண்டும். | **செழுந்தமிழாய்ச்** |
| 4. | தமிழ்மொழி .......... புதுமையும் நிறைந்த சிறந்த மொழி. | **பழமையும்** |
| 5. | மனிதனால் ............ மொழி ஆகும். | **உருவாக்கப்பட்டதே** |
| 6. | மொழியின் உயிர்நாடியாக விளங்குவது .......... என்பர். | **பேச்சுமொழியே** |
| 7. | சொல்லை ஒலிப்பதில் பொருள் வேறுபடும் என்பதை ......... உணர்த்துகிறது. | **நன்னூல் நூற்பா** |
| 8. | ..... இடத்திற்கு இடம் மாறுபடும் | **பேச்சு மொழி** |
| 9. | பேச்சு மொழிக்கு நாம் தந்த வரிவடிவமே ..........யாகும். | **எழுத்து மொழி** |
| 10. | பேச்சுமொழியை ............ என்றும், எழுத்துமொழியை ................ என்றும் கூறுவர் | **உலகவழக்கு, இலக்கிய வழக்கு** |

## V. சந்தி பிழை நீக்கி எழுதுக.

1. பேச்சு மொழியில் உணர்ச்சி கூறுகள் அதிகமாக இருக்கும்.
   **விடை :** பேச்சுமொழியில் உணர்ச்சிக் கூறுகள் அதிகமாக இருக்கும்.
2. நன்றாக சாப்பிட்டான் என்பது எழுத்து மொழி.
   **விடை :** நன்றாகச் சாப்பிட்டான் என்பது எழுத்து மொழி.
3. பேச்சு தமிழ்ப் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.
   **விடை :** பேச்சுத்தமிழ் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
4. அடுத்தத் தலை முறைக்கு கொண்டுச் செல்லப்படுகிறது.
   **விடை :** அடுத்த தலைமுறைக்குத் கொண்டு செல்லப்படுகிறது.

## VI. குறுவினாக்கள் (பாட வினாக்கள்)

**1. மொழியின் இரு வடிவங்கள் யாவை?**

மொழியின் இரு வடிவங்கள் : வரிவடிவம், ஒலிவடிவம்

**2. பேச்சுமொழி என்றால் என்ன?**

- வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும்.
- ஒலி வடிவில் அமைவது பேச்சுமொழி.
- உடனடி பயன்பாட்டிற்கு உரியது.
- மொழியின் உயிர்நாடியாக விளங்குவது பேச்சுமொழி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. வட்டாரமொழி எனப்படுவது யாது?**

➢ பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும்.

➢ இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.
(எ.கா) இருக்கிறது - இருக்கு, இருக்குது

## கூடுதல் வினாக்கள்

**1. மொழி என்றால் என்ன? அதன் பயன் யாது?**

➢ தனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக மனிதனால்உருவாக்கப் பட்டதே மொழி.

➢ ஒருவர்கருத்தை மற்றொருவர் அறிந்து செயல்பட மொழி உதவுகிறது.

**2. எழுத்து மொழி என்றால் என்ன?**

➢ பேச்சுமொழிக்கு நாம் தந்த வரிவடிவமே எழுத்து மொழியாகும்.

➢ ஒருவர் மொழியானது நீண்ட காலம் நிலைபெறுவதற்கு எழுத்து வடிவம் இன்றியமையாதது.

➢ ஒரு மொழியானது நீண்ட காலம் நிலைபெறுவதற்கு எழுத்து வடிவம்இன்றியமையாதது.

➢ எழுத்து மொழியில் காலம், இடம் ஆகியவற்றுக்கு ஏற்பச் சொற்கள் சிதைவதில்லை.

**3. தாய்மொழியை எப்போது சிதையாமல் காக்க முடியும்?**

➢ நாளேடுகள் மற்றும் பருவ இதழ்களில் இன்றும் எழுத்துத் தமிழே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

➢ ஊடகங்களிலும் இலக்கியங்களிலும் திருத்தமான தமிழையே பயன்படுத்த வேண்டும். அப்போது தான் நம் தாய்மொழியைச் சிதையாமல் காக்க முடியும்.

## VII. சிறுவினாக்கள் (பாடவினாக்கள்)

**1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

➢ பேச்சுமொழியில் சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும்.
எழுத்து மொழியில் சொற்கள் முழுமையாக எழுதப்படும்.

➢ பேச்சுமொழியில் உணர்ச்சிக் கூறுகள் அதிகமாக இருக்கும்.
எழுத்து மொழியில் உணர்ச்சிக் கூறுகள் குறைவு.
எ.கா. உம், வந்து போன்ற பொருளற்ற பேச்சு எழுத்து முறையில் இடம் பெறாது.

➢ பேச்சு மொழியில் உடல் மொழியும் குரல் ஏற்றத்தாழ்வும் இணைவதால் அஃது எழுத்துமொழியை விட எளிமையாகக் கருத்தை உணர்த்துகிறது. உடல் மொழி குரல் ஏற்றத்தாழ்வு போன்றவற்றிற்கு எழுத்துமொழியில் இடமில்லை.

➢ எழுத்துமொழி சிந்தித்து எழுதப்படுவதாலும், பிழைகள் ஏற்பட்டால் திருத்திக் கொள்ள வாய்ப்பு இருப்பதாலும் திருத்தமான மொழி நடையில் அமைகிறது.

➢ ஆனால் பேச்சுமொழியில் சிந்திக்க நேரம் குறைவு. திருத்திக் கொள்ள வாய்ப்பும் இல்லை. பேச்சுமொழி திருத்தமான இலக்கிய நடையில் அமைவதில்லை.

**2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

➢ ஒரே மொழியைப் பேசும் மக்கள் (பாடநூல் வினா) வெவ்வேறு இடங்களில் வாழ்வதும் உண்டு. வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாக அவர்கள் பேசும் மொழியில் சிறிது சிறிதாகமாற்றங்கள் ஏற்படும்.

➢ அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும்பொழுது இம்மாற்றங்கள் மிகுதியாகப் புதிய மொழியாகப் பிரியும்.

➢ அவ்வாறு உருவாகும் புதிய மொழியைக் கிளைமொழி என்பர்.

➢ கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளை மொழிகள் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

**1. மொழி பற்றி மு. வரதராசனார் கூறுவது யாது?**

- பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி;
- எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு.
- எண்ணப்படுவது, நினைக்கப்படுவது கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும் என்று மு. வரதராசனார் மொழி பற்றிக் கூறுகிறார்.

**2. இரட்டை வழக்கு என்றால் என்ன? தொல்காப்பியர் என்ன கூறுகிறார்?**

- பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு (Diolossic language) எனப்படும்.
- தமிழில் பழங்காலம் முதலே பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடு இருந்துள்ளது.
- தொல்காப்பியர் இவற்றை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று கூறியுள்ளார்.

**3. மொழி அறிமுகம் – பற்றி விளக்குக.**

- கேட்டல், பேசுதல் என்னும் முதல்நிலையிலேயே குழந்தைகளுக்குத் தாய்மொழி அறிமுகமாகிறது.
- படித்தல், எழுதுதல் என்னும் இரண்டாம் நிலையில் பிற மொழிகள் அறிமுகம் ஆகின்றன.

**4. பேச்சு மொழி எதனால் நீண்டகாலம் நிலைத்து நிற்கிறது?**

- இக்காலத்தில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலம் சான்றோர்களின் உரைகள் ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.
- இதன் காரணமாகப் பேச்சுமொழியும் நீண்டகாலம் நிலைத்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## VIII. சிந்தனை வினா

**1. இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

- இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு வரிவடிவில் அமையும் எழுத்துமொழியே காரணம். இது நீண்டகாலப் பயன்பாட்டிற்கும் உரியது.
- ஒரு மொழியானது நீண்ட காலம் நிலைபெறுவதற்கு எழுத்து வடிவம் இன்றியமையாதது. பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதால்தான் நம்மால் இன்றும்படிக்க முடிகிறது.
- எழுத்து மொழி மாறுவதில்லை ; பெரும்பாலும் மொழித் தூய்மை பேணப்படுகிறது.
- காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்துமொழி தேவைப்படுகின்றது. அதுவே இலக்கியத்தமிழ் இலக்கியங்களில் திருத்தமான தமிழையே பயன்படுத்தித் தாய்மொழியைச் சிதையாமல் காக்க வேண்டும்.
- எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும் என்று மு. வரதராசனார் மொழி பற்றிக் கூறுகிறார்.

## IX. கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சு வழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடர்களை எழுதி வருக.**

**எ.கா. பேச்சுமொழி அம்மா பசிக்கிது. எனக்குச் சோறு வேணும்.**

**எழுத்துமொழி : அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.**

1. **பேச்சுமொழி :** அப்பா! கைல காசில்ல ரூபா வேணும்.
   **எழுத்துமொழி :** அப்பா! கையில் காசில்லை ; ரூபாய் வேண்டும்.
2. **பேச்சுமொழி :** தங்கச்சி கோவிச்சிக்கிட்டுப் போறா, அவள சமரசம் பண்ணுங்க.
   **எழுத்துமொழி :** தங்கை கோபித்துக் கொண்டு போகிறாள். அவளைச் சமாதானம் செய்யுங்கள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **பேச்சுமொழி :** ஒனக்கு மண்டையில என்ன இருக்கு?
**எழுத்துமொழி :** உனக்கு மண்டையில் (தலையில்) என்ன இருக்கிறது?

**2. பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி, அவற்றுக்கு இணையான எழுத்து வழக்குச் சொற்களையும் எழுதுக.**

**எ.கா சொல்லு – சொல், நில்லு – நில், வந்தியா – வந்தாயா? சாப்டியா – சாப்பிட்டாயா?**

| | | | |
|---|---|---|---|
| எண்ணு | - எண் | போனியா? | - போனாயா? |
| கொல்லு | - கொல் | கண்ட்டியா? | - கண்டாயா? |
| வெல்லு | - வெல் | சொன்னியா? | - சொன்னாயா? |
| செல்லு | - செல் | தந்தியா? | - தந்தாயா? |
| காணு | - காண் | கேட்டியா? | - கேட்டாயா? |
| | | கூப்பிட்டியா? | - கூப்பிட்டாயா? |
| | | வந்திட்டியா? | - வந்துவிட்டாயா? |

## விரிவானம் : சொலவடைகள்
## பொம்மலாட்டம்

**1. பாடப்பகுதி பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

ஓர் ஊர்ல ஒரு பையன் இருந்தான். அவன் அம்மா அப்பா சொல்லைக் கேட்பதேயில்லை. ஒழுங்காய்ப் பள்ளிக்கூடம் போகாம ஊரைச் சுத்திக்கிட்டு வருவான். ஒரு நாள் அவன் அப்பா அவனை அழைத்து, இப்ப நீ சரியா படிக்கலைன்னா வாழ்க்கையில முன்னேற முடியாது. ஒழுங்காய்ப்பள்ளிக்கூடம் போயி படிக்கிற வேலையைப் பாரு என்று கூறினார்.

படிக்கிறதெல்லாம் எனக்குப்பிடிக்காது என்று பையன் பதில் கூறினான். அப்பா பொறுமையாக அறிவுரை சொல்லிப் பார்த்தார். ஆனால் அவன் கேட்கவில்லை. அப்பா கோபப்பட்டுச் சத்தம் போடவே அம்மா வீட்டிலிருந்து வெளியே வந்தாங்க, நீ படிக்கலன்னா ஊர்ல யாரும் மதிக்கமாட்டாங்க. அதனால நீ பள்ளிக்கூடம் போயி நல்லாப் படிச்சுக்க என்று அம்மா பையனிடம் கெஞ்சிப் பார்த்தாள்.

அம்மா நெருக்கடி தாங்காம பள்ளிக்குப் போனாலும் படிக்க அவனுக்குப் பிடிக்கல. பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்து விளையாட யாராவது கிடைப்பாங்களான்னு பார்க்குறான்.

எறும்பைப் பார்க்கிறான். எறும்பே! எறும்பே! என் கூட விளையாட வர்றியா? என்று கேட்கிறான், உனக்குத்தான் வேலை இல்லை. குடல் கூழுக்கு அழுவுதாம். கொண்டை பூவுக்கு அழுவுதாம். எனக்கு நெறைய வேல கிடக்கு என்று சொல்லித் தன் வேலையைப்பார்க்க எறும்பு சென்று விட்டது.

தேனீயைப் பார்த்து என் கூட விளையாட வர்றியா?என்று கேட்டான், உனக்குத்தான் வேலை இல்லை. உன்னைப்போல ஒருஆளு இருந்தா எங்கக் கூட்டமே கெட்டுப்போயிடும். எனக்குத் தேன் எடுக்கிற வேலை இருக்கு, போ!போ! என்று தேனீயும் கூறிவிட்டது. அடுத்து பொதிமாடு, ஆமை, முயல் போன்றவற்றையும் விளையாட அழைத்தான். ஒவ்வொன்றும் தனக்கு வேலையிருப்பதாக ஒதுங்கிக்கொண்டன.

கடைசியில குட்டிச் சுவரு மேலே ஏறிக் குதிச்சுக் குதிச்சு விளையாடுறான். அது ரொம்பப் பழைய சுவரு, மழையில வேறு நல்லா ஊறி இருந்தது. இவன் ஏறிக் குதிச்சதும் பொல பொலன்னு இடிஞ்சி விழுந்து, அதுல இருந்த பூச்சி, எறும்பு, வண்டு எல்லாம் வந்து இவன் உடம்பு மேல ஏறிக்கடிச்சது. வலி தாங்காம காட்டுலயும் மேட்டுலயும் ஏறி விழுந்து வீட்டுக்கு ஓடி வந்து சேருகிறான்.

அம்மா! அம்மா! ஊரு உலகத்துல எல்லாரும் அவங்க அவங்க வேலையைப் பாக்குறாங்க. ஈ, எறும்பு கூடச் சும்மா இல்லாம வேலை செய்யுதுக. எனக்கு இப்பத்தான் புத்தி வந்தது. என்னோட வேல படிக்கிறதுன்னு எனக்குப் புரிஞ்சிடுச்சு. இனிமே நானும் சும்மா இருக்காம, ஒழுங்காய்ப் பள்ளிக்கூடம் போயிப் படிப்பேன், என்றான் பையன்.

அதுக்குப்பிறகு, அந்தப் பையன் நல்லபடியா படிக்கத் தொடங்கினான். ஆளுக்கு ஒரு வேலைன்னு எல்லாருக்கும் புரிய வைக்கிறான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக.**

1. புண்ணுக்கு மருந்து போட முடியும்.
   பிடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா?
2. உழைக்கிற மாடு தான் ஊருக்குள்ள விலைபோகும்.
3. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
4. தானாடா விட்டாலும் தன் சதை ஆடும்.
5. யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்.
6. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு.
7. அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்.
8. வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையாதே.
9. நெல்லைக் கொட்டினால் அள்ளலாம். சொல்லைக் கொட்டினால் அள்ள முடியுமா?
10. கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?

**2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

**(எ.கா) குத்துக்கல்லுக்குக் குளிரா வெயிலா என்பது போல் என் நண்பன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தான்.**

1. அதிர அதிர அடிச்சா உதிரவிளையும் அது மாதிரி முயற்சி செய்தால் எல்லாம் சிறப்பாக முடியும்.
2. காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத்தான் தெரியும் என்பதைப்போல வளவன் தன் கஷ்டத்தையெல்லாம் முருகனிடம் கூறினான்.
3. அவ்வப்பொழுது போக்குவதிலும் தவப்பொழுது நல்லதும்பாங்க என்பது போல மீனா தன் நேரத்தை வீணாக்காமல் பயனுள்ள செயல்களில் ஈடுபட்டாள்.
4. எறும்பு ஊரக் கல்லும் தேயுங்கிற மாதிரி முத்துவைக் கொஞ்சம் கொஞ்சமா திருத்தினார்கள்.
5. உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ள விலைபோகும் இன்று நீ நல்லா படிச்சாத் தான் நாளை உன்னைப் பிறர் மதிப்பார்கள் என்று தாய் தன் மகளுக்கு அறிவுரை கூறினாள்.

## கற்கண்டு : இலக்கணம்

### குற்றியலுகரம், குற்றியலிகரம்

**I. கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

(ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து)

| நெடில் தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | வன் தொடர் | மென் தொடர் | இடைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஆறு<br>ஏடு<br>காசு | எஃகு | விறகு | உழக்கு<br>எட்டு | கரும்பு<br>பந்து | கொய்து |

**II. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.** **விடை**

1. பசு, விடு, ஆறு, கரு = கரு
2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து = பஞ்சு
3. ஆறு, மாசு, பாகு, அது = அது
4. அரசு, எய்து, ஒழுங்கு, மார்பு = அரசு
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு = எஃகு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**கூடுதல் வினாக்கள்**

| III. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. உயிர் எழுத்துகள் ........ ஆகும். | **பன்னிரண்டு** |
| 2. மெய் எழுத்துகள் ..... ஆகும் | **பதினெட்டு** |
| 3. சார்பெழுத்துகள் ...... வகைப்படும் | **பத்து** |
| 4. தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் .......... எனப்படும் | **குற்றியலுகரம்** |
| 5. தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவே ஒலிப்பது ...... எனப்படும் | **முற்றியலுகரம்** |
| 6. குற்றியலுகரம் .......... வகைப்படும் | **ஆறு** |
| 7. தன் மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் இகரம் ........... எனப்படும் | **குற்றியலிகரம்** |

## IV. குறுவினா (பாட வினாக்கள்)

**1. 'குற்றியலுகரம்', என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**

➢ குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்.

➢ வல்லின மெய்களின் மேல் (க்,ச்,ட்,த்,ப்,ற்) ஏறி வரும் உகரம் குற்றியலுகரமாகும்.
(க் + உ = கு, ச் + உ = சு, டு, து,பு,று)

➢ குற்றியலுகரம் அரை மாத்திரை அளவு ஒலிக்கும் (எ.கா) சுக்கு, இஃகு, நாடு, பாட்டு, ஆறு, மார்பு)

**2. குற்றியலிகரம் என்றால் என்ன?**

➢ குறுமை + இயல் = இகரம் - குற்றியலிகரம்

➢ தன் மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்படும்.

➢ ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

➢ (எ.கா) வரகு + யாது - என்பது வரகியாது என்று ஒலிக்கும்.

**கூடுதல் வினாக்கள்**

**1. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.**

அ) நெடில் தொடர்க் குற்றியலுகரம் - பாடு

ஆ) ஆய்தத் தொடர் குற்றியலுகரம் - அஃது

இ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - அரசு (ர = ர் + அ)

ஈ) வன்தொடர்க் குற்றியலுகரம் - பேச்சு

உ) மென்தொடர்க் குற்றியலுகரம் - பங்கு

ஊ) இடைத்தொடர்க் குற்றியலுகரம் - மார்பு

**2. முற்றியலுகரத்தைச் சான்றுடன் விவரி.**

➢ தனிக்குறில் அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.

➢ இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர். (எ.கா) புகு, வசு, விடு, அது, வறு, மாவு, ஏழு

**3. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**சார்பெழுத்துகள் பத்து வகைப்படும். அவை**

1. உயிர்மெய், 2. ஆய்தம், 3. உயிரளபெடை, 4. ஒற்றளபெடை, 5. குற்றியலுகரம், 6. குற்றியலிகரம், 7. ஐகாரக் குறுக்கம், 8. ஔகாரக் குறுக்கம், 9. மகரக் குறுக்கம், 10. ஆய்தக்குறுக்கம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப் பெயர்களைப் பட்டியலிட்டு எழுதுங்கள், அவற்றில் குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. ஒன்று | - ன் | - | மென்தொடர்க்குற்றியலுகரம் |
| இரண்டு | - ண் | - | மென்தொடர்க்குற்றியலுகரம் |
| மூன்று | - ன் | - | மென்தொடர்க்குற்றியலுகரம் |
| நான்கு | - ன் | - | மென்தொடர்க்குற்றியலுகரம் |
| ஐந்து | - ந் | - | மென்தொடர்க்குற்றியலுகரம் |
| ஆறு | - ற் | - | நெடில் தொடர்க்குற்றியலுகரம் |
| எட்டு | - ட் | - | வன்தொடர்க்குற்றியலுகரம் |
| ஒன்பது | - ன் | - | உயிர்த்தொடர்குற்றியலுகரம் |
| பத்து | - த் | - | வன்தொடர்க்குற்றியலுகரம் |

**2. குற்றியலுகர எண்ணுப் பெயர்களைக் குற்றியலுகர வகையின்அடிப்படையில் வகைப்படுத்துக.**

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து - மென்தொடர்க் குற்றியலுகரங்கள்

ஆறு - நெடில் தொடர்க்குற்றியலுகரம்

எட்டு, பத்து - வன்தொடர்க்குற்றியலுகரம்

ஒன்பது - உயிர்த்தொடர்க்குற்றியலுகரம்

**3. குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் மாத்திரை அளவைக் கண்டுபிடியுங்கள்**

| | | |
|---|---|---|
| **(எ.கா) ஒன்று** | = | $\mathbf{1 + \frac{1}{2} + \frac{1}{2} = 2}$ |
| இரண்டு | = | $1 + 1 + \frac{1}{2} + \frac{1}{2} = 3$ |
| மூன்று | = | $2 + \frac{1}{2} + \frac{1}{2} = 3$ |
| நான்கு | = | $2 + \frac{1}{2} + \frac{1}{2} = 3$ |
| ஐந்து | = | $2 + \frac{1}{2} + \frac{1}{2} = 3$ |
| ஆறு | = | $2 + \frac{1}{2} = 2\frac{1}{2}$ |
| எட்டு | = | $1 + \frac{1}{2} + \frac{1}{2} = 3$ |
| ஒன்பது | = | $1 + \frac{1}{2} + 1 + \frac{1}{2} = 3$ |
| பத்து | = | $1 + \frac{1}{2} + \frac{1}{2} = 2$ |

**4. கு, சு, டு, து, று ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாகு | பசு | விடு | அது | சால்பு | ஆறு |
| புகு | மாசு | மாடு | காது | உப்பு | வறு |
| பாகு | காசு | பாடு | ஒன்பது | பண்பு | பயறு |
| | அரசு | பாட்டு | பத்து | அம்பு | ஆபற்று |
| | | ஏடு | | | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மொழியை ஆள்வோம்

**1. கேட்க.**

1. தமிழின் சிறப்பைப் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்க.

அ) அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள்.

ஆ) கலைஞர் கருணாநிதியின் சொற்பொழிவுகள்.

இ) பட்டிமன்ற நடுவர்கள் சாலமன் பாப்பையா, லியோனி, ஞானசம்பந்தன், சுகிசிவம், போன்றோர் உரைகள்.

**அ) நிலம் :**

நிலமே இவ்வுலகின் ஆதார மையம் நிலமின்றி எதுவுமில்லை. அனைத்து உயிர்களும் உயிர் வாழ நிலம் அவசியம். நிலத்தை மையமாக வைத்தே நீர், காற்று, தீ அமைகிறது. நிலத்தின் வளமே மனித வாழ்வின் வளமாக அமைகிறது.

**ஆ) நீர் :**

அமிழ்தம் என்று போற்றப்படும் நீரை வைத்தே உலகின் வளமை கணிக்கப்படுகிறது. நீரில்லையேல் இவ்வுலக உயிர்கள் பசியால் வாடி வதங்கி மடிந்து விடும். இவ்வுலகில் தானமும், தவமும் தொடர்ந்து நடைபெறுவதற்கு நீரே காரணமாகும்.

**இ) தீ :**

ஐம்பெரும்பூதங்களில் மிகவும் ஆபத்தானதும், அவசியமானதும் தீ என்னும் நெருப்பே அமைகிறது. மிக விரைவாகப் பொருளை அழிக்கும் தன்மை படைத்தது தீ. தங்கத்தைப் புடமிடப் பயன்படும் தீயானது உணவைச் சமைக்கவும் பயன்படுகிறது. மிகக் கவனமாகக் கையாள வேண்டிய தீயை நாம் ஆக்க வேலைகளுக்கே பயன்டுத்திஅகிலத்தை ஒளிரச் செய்வோம்.

**ஈ) காற்று :**

வளி என்னும் காற்றில்லையேல் வாழ்வில்லை. மனித உயிர்கள் சுவாசிக்கவும், உயிர் வாழவும் இன்றியமையாதது காற்று, வளியில்லையேல் வாழ்வில்லை, சாவு தான். காற்றைச் சுவாசிப்போம், வாழ்வில் சாகசம் புரிவோம்.

**உ) வானம் :**

வானமே நமது கூரை. இவ்வுலக உயிர்கள் வாழ வானமே வசந்த மழையைப் பொழிகிறது. அகன்று, பரந்து, விரிந்து காணப்படுகின்ற வானத்தின் அழகே அழகு! வானம் போல மனதினை உயர்த்துவோம். மமதையை அகற்றுவோம்.

**2. கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**நான் அறிந்த பழமொழிகள்**

முன்னோர்கள், சான்றோர்கள் கூறியுள்ள சிறந்த சொற்றொடர்கள் பழமொழிகளாகும். பழைய பொன்மொழிகள் பொன்னெழுத்துக்களால் நம் உள்ளத்தில் பொறித்து வைக்க வேண்டியவை பொன் மொழிகளாகும்.

- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
- உழைப்பின்றி ஊதியமில்லை
- அறிவே ஆற்றல்
- ஒற்றுமையே வலிமை
- அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும்
- காலம் பொன் போன்றது
- கல்வி கரையில, கற்பவர் நாள் சில.
- அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
- பதறும் காரியம் சிதறும்
- பணம் பத்தும் செய்யும்
- வருமுன் காப்பதே சிறந்தது
- செய்யும் தொழிலே தெய்வம்
- தோல்வியே வெற்றிக்கு அடிப்படை

**3. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்பத் தொடரில் அழுத்தம் தர வேண்டிய சொற்களை எடுத்து எழுதுக.**

கோதை கவிதையைப் படித்தாள்

| **வினா** | **அழுத்தம் தர வேண்டிய சொல்** |
|---|---|
| கோதை எதைப் படித்தாள்? | **எதைப் படித்தாள்?** |
| கவிதையைப் படித்தது யார்? | **படித்தது யார்?** |
| கோதை கவிதையை என்ன செய்தாள்? | **என்ன செய்தாள்?** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. அறிந்து பயன்படுத்துவோம்**

அ) திணை இரண்டு வகைப்படும் அவை 1. உயர்திணை, 2. அஃறிணை

ஆ) ஆறு அறிவுடைய மனிதர்களை உயர்திணை என்பர்.

இ) பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருள்களை அஃறிணை என்பர்.


**5. படத்திற்குப் பொருத்தமான திணையை எழுதுக.**

அ) யாழ் வாசித்தான் - உயர்திணை

ஆ) பசு பால் சுரந்தது - அஃறிணை

இ) பூங்குழலி பூ தொடுத்தாள் - உயர்திணை







**6. கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.**

**வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்**

**உயர்திணை :** முகிலன், கயல்விழி, தலைவி, ஆசிரியர், சுரதா

**அஃறிணை :** வயல், குதிரை, கடல், புத்தகம், மரம்.

**7. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிப்பற்று**

முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப் பற்று - தாய்மொழிப்பற்றுக் கொண்ட சான்றோர் - சாதுவன் வரலாறு - நமது கடமை - முடிவுரை.

**முன்னுரை :**

ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்து கொள்ளவும், அதற்குப் பதிலளிக்கவும் மொழி தேவைப்படுகிறது. தாய்மொழி வழியாகப் பெறும் கல்வியே சிந்தனை வளத்தையும், படைப்பாற்றலையும் வளர்க்க முடியும்.

**மொழி :**

பேச்சுமொழியாக எழுத்துமொழியாக, வளர்ந்து எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியைத் தருவது மொழியாகும். ஒரு மொழியின் வளர்ச்சியைப் பொறுத்தே அந்நாட்டின் பண்பாடு, கலைகள், இலக்கியம் வளர இயலும். ஆகவே மொழி வளர்ச்சியில் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும்.

**தாய்மொழி :**

நாம் பிறந்தது முதல் நமது தாய் கற்றுத் தரும் மொழியே தாய்மொழி. தாய்மொழி தான் குழந்தைகளுக்கு இயல்பாகப் புரியும். அதன் வழிதான் படைப்பாற்றலும் சிந்தனையும் மிகுந்த கல்வியும் வளரும். உலகிலேயே உயர்ந்த சிறந்த பழமையான மொழி தமிழேயாகும்.

**சான்றோர் மொழிகள் :**

"தனித்தமிழ் கொள்கை சாற்றுவதொன்றே இனித்தமிழ் வாழும் எழில்நெறி என்போம்." என்று கூறுகிறார் தனித்தமிழ் இயக்கத் தந்தை தமிழ்க்கடல் மறைமலை அடிகள்.

"அதிர்ந்தெழுதுக! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
இதுதான் நீ செய்யத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம்
எழுக நன்றே," என்று புரட்சிக்கவிஞர் முழங்குகிறார்.

"நண்ணுமிளமைப் பருவத்திலே முதல்
நாவை யசைத்த மொழி - எங்கள்
கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்
கருத்தோ டிசைத்த மொழி" என்று
வரதநஞ்சையப் பிள்ளை கூறுகிறார்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**சாதுவன் வரலாறு :**

மணிமேகலை காப்பியத்தில் இடம்பெறும் ஆதிரையின் கணவன் சாதுவன். அவன் கடல் வாணிகம் செய்யச் சென்ற போது கப்பல் உடைந்தது, மரத்துண்டைப் பிடித்துக் கொண்டு ஒரு தீவில் கரையேறினான். அத்தீவில் வேற்று மனிதர்கள் நுழைந்தால் அவர்களைக் கொன்றுவிடுவர். சாதுவன் அத்தீவிலுள்ள மக்களின் மொழியைப் பேசியதால் உயிர் பிழைத்தான். தாய்மொழி உயிரைக்காக்கும் தன்மை வாய்ந்தது என்பதை இந்நிகழ்வின் மூலம் அறிகிறோம்.

**நமது கடமை :**

துறைதோறும் தமிழுக்குத் தொண்டு செய்வோம். தாய்மொழி வளர்ப்போம். தரணி காப்போம், தாய்மொழியை வளர்ப்பது நமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

**முடிவுரை :**

எம்மொழி ஆதிக்கம் நம்மைத் துரத்தினாலும் நம் மொழி காத்து நாம் தலை நிமிர்ந்து நிற்போம். தரணியில் தன்னிகரில்லா நிலையில் திகழும் தாய் மொழி காப்போம். உலகம் போற்றும் உயர்ந்த நிலை அடைவோம்.

## மொழியோடு விளையாடு

**1. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.**

(எ.கா) **இருதிணை** : உயர்திணை, அஃறிணை

**முக்கனி :** மா, பலா, வாழை

**முத்தமிழ் :** இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்

**நாற்றிசை :** வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு

**ஐவகைநிலம் :** குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

**அறுசுவை :** இனிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு

**2. கட்டங்களிலுள்ள எழுத்துகளை மாற்றி, மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் எழுதினால் ஒரே சொல் வருமாறு கட்டங்களில் எழுதுக.**

➢ எதுகை ➢ துறவி ➢ கைவினை ➢ மதகு ➢ தந்தி ➢ குதிரை

(எ.கா)

| | | |
|---|---|---|
| கை | எ | து |
| ற | து | வி |
| னை | கை | வி |

| | | |
|---|---|---|
| கு | ம | த |
| ந் | தி | த |
| ரை | கு | தி |

**விடை**

| | | |
|---|---|---|
| எ | து | கை |
| து | ற | வி |
| கை | வி | னை |

| | | |
|---|---|---|
| ம | த | கு |
| த | ந் | தி |
| கு | தி | ரை |

**3. இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.**

**(எ.கா) அரசுக்குத் தவறாமல் வரி செலுத்த வேண்டும்.**

**ஏட்டில் எழுதுவது வரி வடிவம்**

1. மழலை பேசும் மொழி அழகு.
   இனிமைத் தமிழ் மொழி எமது.
2. அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை நடை பழகும்.
   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்கு மொழி நடை.
3. நீ அறிந்ததைப் பிறருக்குச் சொல்
   எழுத்துகள் தொடர்ந்துநின்று பொருள் தருவது சொல்
4. உழவர்கள் நாற்று நட வயலுக்குச் செல்வர்.
   குழந்தையை மெதுவாக நட என்போம்.
5. நீதி மன்றத்தில் தொடுப்பது வழக்கு
   'நீச்சத் தண்ணி குடி,' என்பது பேச்சுவழக்கு,

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊடகம் | - | Media |
| 2. | மொழியியல் | - | Linguistics |
| 3. | ஒலியியல் | - | Phonology |
| 4. | இதழியல் | - | Journalism |
| 5. | பருவ இதழ் | - | Magazine |
| 6. | பொம்மலாட்டம் | - | Puppetry |
| 7. | எழுத்திலக்கணம் | - | Orthography |
| 8. | உரையாடல் | - | Dialogue |

***



Kindly send me your study materials to padasalai.net@gmail.com